செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

JAFFNA COLLEGE
UNDERGRADUATE LIBRARY
OCT 24 '67

இந்து சாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம் : விரோதி ஞ (1889) ஆவணி மீ 28உ. அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

[புத்-எகூ] யாழ்ப்பாணம்- பிலவங்க ஞ புரட்டாதி மீ உஎ உ வெள்ளிக்கிழமை (13-10-1967) [இல-உஎ]

அருட் செல்வம் (4)

[அருட்கவி சீ விநாசித்தம்பி அவர்கள்]

சிவலோகமும் சித்திக்கும்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

பத்துமாதம் சுமந்து பக்குவமாகப் பெற்றெடுக்கிறுள் அன்னை. கருவினுள் கிடக்கும்போது ஒரே இருள். பிறந்ததும் ஒரு வெளிப்பு—மயக்கம கொஞ்சம்கொஞ்சம் வெளிக்கிறது குழந்தைக்கு. தாயைப் பார்த்துச் சல்லாபம் செய்கிறுன். நாட்கள் செல்லச்செல்ல அன்னையானவள் தந்தையைக் காட்டி வைக்கிறுள். "மகனே! இவர்தான் உனது அப்பா — என்னையும உன்னையும் உடையவர். இவரே இந்தவீட்டிற்குப் பொறுப்பாளி. இவரின் முயற்சியில்லா விட்டால் நானும் நீயும் வாழமுடியாது ஆகையினுலே நான் உன்னைச் சீராட்டிப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தாலும் — எனக்கும் உனக்கும இந்த வீடு முதலியஉடமைக்கும உங்கள் அப்பாதான் பொறுப்பாளி. அவரில்லாவிட்டால் எங்கள் குடும்பம் சீர் குலைந்துவிடும். ஆகையினுல நீ நல்லமுறையில் வளர்ந்து அப்பாவுடைய உதவியாலே பெரிய உத்தியோகப் பதவியைப் பெறவேண்டு" மென்று, கருணையுள்ள தாய் வழிநடாத்துகிறுள். —

இந்த நெறியிலேதான் சுட் வணங்கும் அருட்சக்தியினுல் சிவகதி — சிவலோகம சித்திக்கிறது சத்திதான் சிவனைக் காட்டிவைப்பவள். அவளது ஆசீர்வாதம் இல்லையானுல் சிவலோகம் சித்தியாது.

தாயைப் பேணுத பிள்ளைக்குத் தந்தையின் கருணையில்லாமற் போய்விடுகிறது — புருஷபத்தியுள்ளவள் பத்தினி. அவள்தான் கற்பின் திலகம. அந்தப் பத்தினி — பதி (புருஷன்) யின் வாயிலிருந்து என்ன வசனம் வருகிறதோ அதன்படி நடக்கச் சித்தமாயிருப்பாளாம் அவள் பெறுகிற பிள்ளைதான் உண்மையில் பிதாவைக்கரிசனையோடு பார்க்கும் பிள்ளை. ஆகையினுலேதான் உலகமாதாவாகிய இறைவி "வாக்கே நோக்கிய மங்கை" யாக இருக்கிறுள். அவள் காதலனைப் பிரியாதவள் — மரமொன்று அசையும்போது அதிலே பற்றிநின்ற கொடியும் அசைவதுபோல — அசைவாளாம் இறைவி. இதை அபிராமிப்பட்டர் கூறுகிருர்

"சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே"

இந்தப் பூங்கொடி இரு பூக்களை அடியிலே பூக்கிறது. அந்தப் பூ — எப்பொழுதும — வாடாத புதிய பூ அது அல்லும்பகலும் வாடாமலிருப்பதாலே, அந்த மலரை அல்லும் பகலும் தொழுகின்ற—ண்ணுகின்ற பிள்ளைக்கு (அன்பருக்கு) என்ன கிடைக்கும் பார்ப்போம; 1. அழியா அரசியல் —அது (நீதிலா நன்மைத திருவருள்) 2. எவ்வுலகும செல்லக் கூடிய — தேவர்கள் அனுமதிக்கத்தக்க — தவ நெறி 3. சிவலோகம (சிவனடிக கமலம்) ஆகையினுல் சக்தியின் திருவடிக் கமலத்தைத தொழுதால் — அவள் சிவனது திருவடிக்கமலத்தைப் பெறவைப்பாள், என்பதை இங்கே அபிராமிப்பட்டர் மிக இனிமையாகக் கூறுகிருர்.

சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே, நின்புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கேயழி யாவரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே

அழியாவரசு — செல்வம், தவநெறி — கல்வி ("ஒழிவின்றிப் பயின்றவற்ருல் தெள்ளி வடித்தறிந்த பொருள்" சேக்கிழார்)

சிவலோகம் — வீரத்தால்பெறுவது ("ஆதிபாதம் அடைவது வீரமே" — யோகர்சுவாமிகள்.)

சத்தியைத் தொழுது சித்தியைப் பெறுவோம்!

உ
சிவமயம்

மண்கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய் படைப்போன்
முதலாம்
விண்கண்ட தெய்வம்பல்கோடி
யுண்
டேனும் விளம்பி லுன்போற்
கண் கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே!.

— குமரகுருபரசுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே நமக்கு உத்தம சினேகிதர்கள்.

O

ஈழத்துச் சிதம்பரத்தில்

அன்னபிஷேகம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் சௌந்தராம்பிகா தேவிக்கும் ஐப்பசி மீ 1உ (18-10-67) புதன்கிழமை பகல் 10 மணியளவில் விஷேச ஸ்நபன அபிஷேக அன்னபிஷேகமும் சோடசோபசார ஆராதனைகளும் வணப்புற நிகழும். —

நவராத்திரி விழா

புன்னுலைக்கட்டுவனில்

புன்னுலைக்கட்டுவன் ஆயாக்கடவை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் 4-10-67 முதல் 12-10-67 வரை நவராத்திரி பூசை வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. ஷெ காலங்களில் இரவு 7 மணிமுதல் விஷேஷ அபிஷேக சோட சோபசார ஆராதனைகளுடன் கூட்டுப்பிரார்த்தனை சொற்பொழிவு முதலியனவும் இடம்பெற்றன.

12-10-67 மாலை சுவாமி வீதி வலம் வந்து சிவபூதேஸ்வரர் கோவிற் திருவீதியில் மாணபூ நிகழ்ச்சியும் நடைபெற்றது.

X X X

புன்னுலைக்கட்டுவன் சனசமூக நிலைய வாசிகசாலையில் சரஸ்வதி பூஜை 11-10-67 இரவு 7 மணி முதல வெகு அலங்காரமாக நடைபெற்றது. விஷேஷ பூசையும் சனசமூகநிலைய புதிய உஸ்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றன.

ந. வி.

X X X

அரசியல் அலுவலகங்களில்

தபால் தந்திஇலாகா இலங்கை மத்தியவங்கி, துறைமுக கூட்டுத்தாபனம் முதலிய சில கூட்டுத்தாபனங்களிலும் சரஸ்வதிபூசை இம்முறை சிறப்புறக் கொண்டாடப்பெற்றது.

ஷெ நிகழ்ச்சிகளில் சங்கீதக்கச்சேரிகளும் பிற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

X X X

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் ஷெ விழா 9, 10, 11-10-67 திகதிகளில் சிறப்புற நடைபெற்றது

9-ந் திகதி நடன அரங்கும் 10 ௨ நாடக அரங்கும் 11 ௨ இசையரங்கும் இடம்பெற்றது.

10 ௨ கல்லூரி ஆசிரியர் செ. கதிரேசபிள்ளையால தயாரித்தளிக்கப்பெற்ற "அப்பையின் வஞ்சினம்" என்னும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

X X X

யாழ். நாயன்மார்கட்டு மகேசுவரிவித்தியாசாலையில் சரஸ்வதி பூசை மிகச் சிறப்பாக நிகழ்ந்தது.

திருவிளையாடற் புராண விரிவுரை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில், நல்லை. மதுரைத் திருஞானசம்பந்தராதீனத் தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ. சுவாமிநாததம்பிரான்** அவர்கள் சபை ஆச்சிரம நாவலர்மண்டபத்தில் 20-10-67 வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு திருவிளையாடற் புராணத் தொடர்ச்சிப் பிரசங்கம் "திருநகரங் கண்ட படலம்" என்னும் பொருள்பற்றிப் பக்க வாத்திய சகிதம் புரியத் திருவருள் கூட்டி வைத்திருக்கின்றது.

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 12-10-67.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

ஒரு வேண்டுகோள்

ஈழநாட்டின் சைவக்கோயில்களின் முகாமைக்காரர்களுக்கும் பூசகர்களுக்கும், கல்லூரிகள் வித்தியாசாலை அதிபர்களுக்கும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சார்பாக யாம் செய்கின்ற விண்ணப்பம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை இற்றைக்கு எண்பது வருடங்களுக்குமுன் எங்கள்நாட்டில் அவதாரம்செய்த ஐந்தாம் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய சீடர்களாலும் பிற சைவாபிமானிகளாலும் தாபிக்கப்பெற்று, நமது நாட்டில் சைவசமயத்துக்கும்தமிழ்மொழிக்கும் தொண்டுசெய்தமையை யாவரும அறிவர். சபை செய்த பணிகளுள் முக்கியமானது சைவப்பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்களையும், **இந்துசாதனம்** தமிழ், ஆங்கில பத்திரிகைகளையும் பிரசுரஞ் செய்தமையாகும். அரசாங்கம் சமயச்சார்புள்ள வித்தியாசாலைகளை எடுத்துக் கொண்டமையாலும் பாடப் புத்தகங்களையும் பிரசுரஞ்செய்ய ஆரம்பித்தமையினுலும் சபையாருடைய வருமானம் மிகவும் அருகிவிட்டது. சபையார் இப்பொழுது சைவப்பிரசங்கங்களையும் சமய வகுப்புக்களையும் கோவில்களையும மடங்களையும் பரிபாலித்தலும் இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களை வெளியிடுதலுமாகிய பணிகளைப் புரிகின்றுர்கள். சபையாருடைய தொண்டுகளை முட்டின்றி நடாத்தப் பெருந்தொகை நிதி தேவைப்படுகின்றது; எங்கள் நாட்டிலுள்ள சைவக்கோயில்களின் முகாமைக்காரர்களையும் குருக்கள் மாரையும் கல்லூரி, வித்தியாசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் எங்கள் சபையார் பிரசுரஞ்செய்கின்ற பத்திரிகைகளுக்குச் சந்தாதாரராய்ச் சேரும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வருடச் சந்தா விகிதம்

உள்நாடு		வெளிநாடு	
ஆங்கிலம்	— 9-00	ஆங்கிலம்	—10-50
தமிழ்	— 9-00	தமிழ்	—10-50
ஆங்கிலம்-தமிழ்	—12-00	ஆங்கிலம்-தமிழ்	—15-50

பாடசாலைகளுக்கும் தேவாலயங்களுக்குந் தேவையான அச்சு வேலைகளுஞ் செய்து கொடுக்கப்படும்.

க. செ. பாலசுப்பிரமணிய ஐயர்
அச்சக அதிபர்,

இ. நம. சிவப்பிரகாசம்
ஆங்கிலப் பத்திராதிபர்,

மு. மயில்வாகனம்
தமிழ்ப் பத்திராதிபர்.

இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

பிலவங்க௵ புரட்டாதி மீ உஎ-௨ வெள்ளிக்கிழமை [1967]

பக்தி அல்லது அன்பு

பக்தி அன்பு என்பன ஒரு பொருளையே குறிக்கும். எமக்கு யாவரிடத்து விருப்பம் நிகழுமோ அவரிடத்தே நமக்கு அன்பு நிகழும். அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சி. நமக்கு இனியவரென்று நாம் கருதுகின்ற தந்தை தாய் மனைவி மைந்தர் முதலிய உறவினரே நமக்கு இனியவரென்று கருதி அவர்களிடத்து அன்புசெய்வோமாயின் அவர்களுக்கும் எமக்கும் உள்ள தொடர்ச்சி நீர்க்குமிழி போன்றது. அத்தொடர்ச்சி உடம்பினாலாயது. அவர்களும் எமக்கு இதம்செய்தல் தம்பயன்கருதியன்றி எம்பயன்கருதியன்று. நமக்குநாமே இனியமெனக்கொள்வமெனின் கேவலாவத்தையில் ஆணவமல மறைப்பினால் அறிவுந் தொழிலும் சிறிதும் விளங்காமையினாலும் சகலாவத்தையில் அறிவுந் தொழிலும் உள்வழியும் அவை சிற்றறிவும் சிறுதொழிலு மன்றி முற்றறிவும் முற்றுந் தொழிலும் அன்மையாலும் எமக்கு உய்யும் நெறி தோன்றாமையானும் எமக்கு நாமே இனியமெனக் கொள்ளுதலும கூடாது. முற்றறிவும் முற்றுந் தொழிலும் உடையவராய் ஆன்மாக்கள் மீது பெருங் கருணை உடையவராய் அவர்களுக்குத் தனு கரண புவன போகங்களைக் கொடுத்து ஆணவமல சக்தியைச் சிறிது நீக்கி அறிவை விளக்கிப் போகங்களைப் புசிப்பித்து மலபரிபாகமும் இருவினையொப்பும்சத்திநிபாதமும வருவித்து பாச நீக்கமும் சிவத்துவ விளக்கும் செய்யும் பரமபதி ஒருவர் உண்மையாலும் அவர் சிவனே ஆதலானும் அவரையே நமக்கு இனியவரெனக் கொள்ளல்வேண்டும். இக்கருத்தினை நோக்கியே

“என்னில் யாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யாளொரு வன்னுள
னென்னுளே யுயிர்ப் பாய்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கு மின்னம்ப ரீசனே”

என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய்மலர்ந்தருளினார். ஆதலால் நாமெல்லாம் அச் சிவபெருமானிடத்து மெய்யன்புசெய்தல்வேண்டும்.

இவ்வன்பு இல்லாதபொழுது சிவனை அடைதல் ஒருவாற்றானுங் கூடாது.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழைவார்க் கன்றி
என் பொன் மணியினை யெய்த வொண்ணாதே

எலும்பையே விறகாய்க் கொண்டு இறைச்சியை அக்கினியிலிட்டு வறுத்துக் கடுந்தவஞ் செய்தாலும் அன்பிலாதவர்கள் இறைவனை அடையமாட்டார்கள். மனம் நெக்குருகிக் குழைகின்றவர்களே விலை மதிப்புள்ள மணிபோன்ற சிவபெருமானை அடைவார்கள். இடையறாது முறுகி வளரும் அன்பின் முதிர்ச்சியாலே சிவம்விளங்குதல். அன்பும் சிவமும் இரண்டற்ற பேதமாய் நிற்கும்.

“பக்தி வலையில் படுவோன் காண்க” எனவும் “அன்பினில் விளைந்த ஆரமுதே” எனவும் “ஈறிலாப் பதங்களியா வையுங் கடந்த இன்பமே என்னுடையன்பே” எனவும திருவாசகத்தில இதற்குப் பிரமாணம் காணலாம்.

கண்ணப்பநாயனார் திருக்காளத்தியப்பருடைய திருக்கண்ணிலிருந்து குருதி சோரும்பொழுது செயற்கரிய செய்கையாகத் தமது கண்ணையிடந்தப்ப முன்வந்தமை நாயனார் காளத்தியப்பரைத் தம்மினுமினியராக மதித்தமையினாலன்றோ?

“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை யென்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் — கண்ணப்பர்
தாமறிதல் காளத்தியார் றறிதலல்லது மற்
றூறறியு மன்பன்றது”

என்கிறது திருக்களிற்றுப்படியார்.

கண்ணப்பநாயனாருடைய அன்புக்குச் சமமாக ஒருவரிடத்திலுமன்பில்லை. அவருடைய அன்பின் பெருமையை கண்ணப்பரறிவார் காளத்தியாரறிவார். அதனைப் பிறரறிய வொண்ணாது.

ஒருவரிடம் சீவகாருண்ணியம் உண்டானால் முத்தியடைவதற்கு அது போதுமானது. பக்தி தேவையில்லையெனச் சிலர் கருதுகின்றனர். அது தவறு. பக்திதான் நீராசை, சீவகாருண்ணியம், பொறை, முதலிய நற்குணங்களை விருத்திசெய்யுமென்பதை நாம் மனதில் பதியவைத்தல்வேண்டும்.

இவ்வன்பே இறைவனடியை ஆன்மா அடைதற்கு ஒரு தோணியாகவுள்ளது.

சரஸ்வதி பூசையும் “சித்திரச் சுடரொளி” நூல் வெளியீட்டு விழாவும்

ஷெ நிகழ்ச்சிகள் வண்-வடகிழக்குச் சனசமூகநிலைய ஆதரவில் சென்ற 8-10-67-ல் யாழ் சைவபரிபாலன சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

விழாவிற்குத் தலைமைதாங்கிய திரு S. U. சோமசேகரம் (M A. Dip. in Ed.) அவர்கள் சித்திரச்சுடரொளி நூலாசிரியரை அவையினர்க்கு அறிமுகம் செய்து “சித்திரச் சுடரொளி” என்னும் நூல் கலைவாணியின் தத்துவவிளக்கத்தை விஞ்ஞான உதாரணங்களையும் உள இயல் மேற்கோள்களையும் கொண்டு சைவ சித்தாந்த மரபைப் பெருமளவு தழுவி எழுதப்பட்ட ஒரு புதிய நோக்குள்ளதாகும். இரவி வர்மா தீட்டிய ஓவியத்திற்கு ஒரு நவீன மெருகுகொடுத்து சரஸ்வதி வழிபாட்டில் எவருக்கும் நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. இந்நூலை இந்துக்கள் யாவரும வாசித்துப்பலனடையவேண்டும் என உரைத்தனர்.

கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு சி. கதிரவேற்பிள்ளை இந் நூல் சைவ உலகிலே ஒரு மறுமலர்ச்சியைச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. இயற்கைக்குமாறான கடவுள் உருவங்கள் இருக்கமுடியாதெனச் சந்தேகப்படும இளைஞர்கள் அவ்வுருவங்களை உடைய கடவுளே இல்லை எனும அளவிற்கு நாஸ்திகம் பேச முற்படும் இக்காலத்தில் உள நூல் ஆராச்சியுடன் உருவ வழிபாட்டின் அவசியத்தை வற்புறுத்தி நிலைநாட்டும் ஒரு நூல் வரவேற்கத்தக்கதாகும் எனக் குறிப்பிட்டார்.

முகாந்திரம் E. P இராசையா அவர்கள் தலைவரிடமிருந்து “சித்திரச் சுடரொளி” நூற்பிரதி ஒன்றை முதலாவதாகப் பெற்றுதவினார்கள்.

ஈற்றில் உரை நிகழ்த்திய சித்திரச் சுடரொளி ஆசிரியர் செல்லப்பா அவர்கள் சரஸ்வதி எனும் வடசொல் ஆற்றில் உறைபவள் எனும் பொருளையே சிறப்பாகக் குறிக்கிறது. உலகில்நாகரீகம் முதன்முதற் தோன்றியது வளம்பொருந்திய ஆற்றங்கரையிலேதான். இந்துநாகரீகம் இந்துநதிக்கரையிலே ஏற்பட்டது. இந்த நாகரீகம் வேதகாலத்திலிருந்து வாக்குச் சக்தியால் பேணிப்பாதுகாத்து வரப்பட்டமையால் - வாக்கையே சரஸ்வதியென நாம் இன்று நாமகள உருவிலே - வள்ளுவன் குறித்த தூய்மையின்பாற்பட்ட வாய்மையின் தத்துவத்திலே - வழிபடுதல் சாலச் சிறந்தது மக்களிடம் உள்ள சிந்தனா சக்தியையும் சொற்சக்தியையும செயல் ஆற்றும் சக்தியையும்விருத்தி செய்வதே நவராத்திரியில் நாம் செய்யும் வழிபாடாக அமைதல் வேண்டும் எனக் கூறினர்.

பல அறிஞர்களின் பாராட்டுரைகளும் இன்னிசைக்கச்சேரியும் இடம்பெற்றன.

பரிசளிப்பு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியினது பரிசளிப்புவிழா 17-10 67 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணிக்கு ஷெ கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். இலங்கைச் சர்வகலாசாலைப் பொறியியல் விரிவுரையாளர் திரு: த. சிவப்பிரகாசபிள்ளை BSC A. C. G L, (Eng'g Lon) M. I. C. E. அவர்கள் பரிசளிப்பு விழாவினது விசேஷப் பேருரையை நிகழ்த்துவார். ஸ்ரீமதி த. சிவப்பிரகாசபிள்ளை அவர்கள் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவார்.

காரைநகர் இந்து இளைஞர் மன்றம்

காரைநகர் இந்து இளைஞர்களால் ஷெ மன்றம் 12-10-67 விஜய தசமியன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு கீழ் வரும் நிர்வாக உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தலைவர்: D. V. சிறில், உபதலைவர் N. குஞ்சிதபாதம், காரியதரிசி S. தெட்சணாமூர்த்தி, உபகாரியதரிசி J. நவலையம்பலவாணர். தனாதிகாரி S. சோமாஸ்கந்தன உபதனாதிகாரி K செல்வரத்தினம், ஷெ மன்றத்துக்கு எழுபேர் கொண்ட நிருவாக சபையும் அமைக்கப்பட்டது.

சரஸ்வதி பூசையும் வித்தியாரம்பமும்

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் 12-10-67 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் சரஸ்வதி பூஜை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. இளைப்பாறிய தலைமை ஆசிரியர் “ஆலயப் பிரசாரகர்” உயர்திரு: நா. பொன்னம்பலம் அவர்கள் ஷெ நாளில் பல சிறார்களுக்கு வித்தியாரம்பம செய்து வைத்தனர். மற்றும் பல ஆசிரியர்களின் நல்லுரைகளும் இடம் பெற்றன. (ந. நி)

அணிந்துரை அரங்கம்

சித்திரச் சுடரொளி
ஆக்கியோன் :
நா. செல்லப்பா
விலை: ரூபா 2-00.
கிடைகுமிடம்:
நா. செல்லப்பா, 41 பிறவுண்வீதி
வண்ணை, யாழ்ப்பாணம்.

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.

“உரனென்னுந் தோட்டியா
னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர்
வித்து”

மனிதனுடைய ஐம்புலன்களையும ஒரு மத யானையாக உருவகஞ் செய்கின்றார் திருவள்ளுவநாயனார். அவை மனிதனுடைய மனத்தை நிலையாத இன்பங்களிலே செலுத்தும் தன்மை வாய்ந்தன. அந்த யானையை மனிதன் அறிவாகிய தோட்டியினால் அடக்கியாளுதல் வேண்டும். அப்பொழுது அவன் மெய்யுணர்வைப் பெற்று வீட்டுலகை யடைவான். வீட்டுலகிற் சென்று மூளைக்கும் பெற்றி உண்டாவதுபற்றி அவனை வித்தென்றார். ஐம்புலன்களையும் மனிதன் வெல்லுதற்கு அறிவைப் பெறுதல் வேண்டும். ஞான வடிவினனாகிய இறைவனை வழிபட்டாற்றான் ஒருவனுக்கு ஞானம் கிடைக்கும். சைவர்கள் இறைவனை ஆண்பாற்படுத்திச் சிவனெனவும் பெண்பாற்படுத்தி உமாதேவியாரெனவும் வழிபடுவர். சரசுவதி உமாதேவியாரின் ஓர் அம்சமே.

இந் நூலில் ஆசிரியர் கலைமகளின் பெருமையை விரிவாக விளக்கியுள்ளார். நூலின் முகப்பில் ரவிவர்மாவினால் வரையப்பட்ட சரசுவதியின் அழகான திருவுருவம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. சரசுவதி ஓர் மலையில் வீற்றிருக்கின்றார். பக்கத்தில் ஒரு மயில் காணப்படுகிறது. ஓர் ஆறு காணப்படுகின்றது. இரு கரங்களில் வீணையிருக்கின்றது. ஒருகரத்தில் செபமாலையிருக்கின்றது ஒரு கையில் ஏடு இருக்கின்றது. இவற்றின் தத்துவங்களையெல்லாம். ஆசிரியர் சிறப்பாக மேலைத்தேச உளநூலாராய்ச்சியுடன் விளக்கியுள்ளனர். சரசுவதி வெள்ளைக்கலை அணிந்திருக்கின்றனர். ஒருவன் தன் மனத்தைக் களங்கமற்றநிலையில் வைத்திருந்தாற்றான் இறைவன் அவனுடைய உள்ளத்திலமர்ந்திருப்பான் என்ற தத்துவத்தை அம்மையாருடைய வெள்ளைக்கலை உணர்த்துகின்றது. ஆன்மாக்கள் இறைவனாகிய இன்பசாகரத்துடன் இரண்டறக் கலக்கத் துணைபுரியவேண்டுமென்னும் தூய நோக்கத்துடனேயே ஆசிரியர் இந் நூலினை ஆக்கியுள்ளனர்.

ஆசிரியர் சிதம்பரத்தில் புண்ணியநாச்சி மடத்தைத் தாபித்து அம்மட நிருவாகத்துக்கும் தில்லைநடராசப்பெருமானுடைய அபிடேகாராதனைகளுக்கும் பெறுமதியுள்ள தரும சொத்துக்களைத் தரும சாதனஞ் செய்துள்ள புண்ணியநாச்சியம்மையாருடைய சந்ததியைச் சேர்ந்தவராகையால் அவர் இந் நூலினை அவ்வம்மையாரது நினைவுமலராக வெளியிட்டுள்ளனர்.

திருமுறைகளின் பெருமையை விளக்கும் திருத்தலம்

"பண்மழையும் — விண்மழையும்"

"நாயன்மார்களால் ஓதப்பெற்று வந்த — சைவத் தெய்வத் திருமுறைகளை — தெவிட்டாத தீந்தமிழ்ப்பனுவல்களை — உள்ளத் தூய்மையுடன் — ஏத்திப் போற்றிப்புகழ்ந்து பாடிப் பரவிப் பணிந்து பயன் மிகப் பெற்று வருகின்றீர்கள் என்று முன்பு அறிந்தேன்; அதை இன்று இங்கு நேரிற்கண்டேன்"

"சொன் மலர்களை 'அன்பு, என்னும் கயிற்றினற் கட்டி, ஆக்கப்பட்ட பா மாலைகளாகிய பன்னிரு திருமுறைகளை அம்பிகையின் ஆலயச் சூழலிலே ஓதி அம்பிகையின் திருவடிகளில் அணிந்து வருகின்றீர்கள். பெருமைமிக்க இந்தத் திருப்பதிக்கு 'நாயன்மார்கட்டு' என்ற நவமான பெயர் அமைந்தது முற்றும் பொருத்தமே" என்றிவ்வாறு சென்ற 10-10-67-ல் நிகழ்ந்த நவராத்திரி விழாவில் கலந்து, அருளுரை வழங்கும் போது, நல்லை. மதுரைத் திருஞானசம்பந்தராதீனத்து மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

இவ்விழா நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் ஆதரவில் ஸ்ரீ இராச இராசேசுவரி பேச்சியம்பாள் ஆலய மகாமண்டபத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் 'நவராத்திரிவிழா'வின் தத்துவங்களை விளக்கியதுடன், இன்றைய சைவமக்களின் கடமைகளையும், எதிர்கால இளையோருடைய பணிகளையும் குறிப்பிட்டு, நல்லுபதேசம் நவின்று ஆசியுரையும் வழங்கினார்கள்.

ஷ ஆலயத்தில் பூசை, ஆராதனை, வழிபாடு முடிந்ததும், ஏறத்தாள முந்நூற்றுக்கும்மேற்பட்ட (ஆண் பெண் குழந்தைகள்) மக்கள் இரண்டுமணிநேரமாலம் வரை திருமுறை பசனையில் பக்தியுடன் ஈடுபட்டிருந்தார்கள் "வையகமுற்றும் மாமழை மறந்து வயலினில் நீரிலை மாநிலந் தருகோம........" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடலை ஓதும்போது, எல்லோரது உள்ளமும் உவகை பூற்றெடுக்க — தேவி வழிபாட்டிற் திளைத்திருந்தனர்.

சுவாமிகளை வரவேற்று உரை நிகழ்த்திய கழகத் தலைவர் ஈழத்தில் ஆதீனம் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளை விளக்கி, தம்பிரான்சுவாமிகள் ஒரு ஞானசூரியனாகவிருந்து சைவ ஒளிபரப்பிவருவது நாம் செய்த தவப்பயனே என நவின்றனர். செயலாளர் நன்றியுரையில், தம்பிரான் சுவாமிகள் இங்கு எழுந்தருளி வந்து அருள்மழை பொழிந்து ஆன்மீகப் பயிர் அணிபெற வளர உதவியுள்ளார்கள்; அவர்கள் கருணை வாழ்க" என வேண்டியதுடன், "நாட்டில் நன்மாரி வேண்டியகாலங்களில் — நல்லார்கள் வந்துரையாற்றிச் செல்லும் ஒரு ஒழுங்கு இவ்வூரிலுண்டென்றும், அவ்வழியில் நல்லை நாவலர்பெருமானது பிரசங்கம் நிகழ்ந்தபின்பும், புரிசை முருகேசமுதலியார் (இரு தடவை) திருவெண்காடு சிவராஜயோக மடாதிபதிகள் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள் போன்ற தவச்செல்வர்கள் வந்தகாலத்திலும் நிகழ்ந்திருப்பதையும் அஃதேவழியில் எங்கள் நல்லை திருஞானசம்பந்தராதீனத்தலைவரது வருகையும் அமைந்துள்ளதால் 'தம்பிரான் வருகையால் எமக்கு பொன் மழையுண்டு" எனக் குறிப்பிட்டனர். 12-10-67ல் நள்ளிரவு நல்லமழை நாயன்மார்கட்டில் பொழிந்தது.

சைவசமயிகளின் விழிப்பு

புலவர் சிகாமணி. வ. மு. இரத்தினேஸ்வர ஐயர்,
நீர்வாவியடி,

இவ்வுலகம் பலவித இயற்கைப் பொருளின் சேர்க்கையுடையது. எப்பொருளையும்மக்கள் அனுபவிக்கிறார்கள். இப்பொருள்கள் தோன்றி மறையும் பான்மையன. ஆராய்ச்சியினல் உண்மையை உணரலாம். சைவசமயம தொன்மையான ஒரு நெறி சிவசம்பந்தமானதால சைவம் என்பர். பாரத நாட்டில் பல ஆதீனங்கள் இருக்கின்றன. சமயத்தையும, சமய வழியொழுகுவோரையும் ஆங்கே பரக்கக் காணலாம். சமயப் பேரவையை ஆதீனங்களின் பரமாசாரியர்கள் கண்ணாகக் கருதிச் சிவநாமம் எங்கும்ஒரேஒலி, செஞ்சொற் பொழிவுகள் யாணடும் செவிக்கமிர்தமாகச் சொரிகின்றன. இங்கே தான் என்ன? சமயச் செல்வர்கள் தூங்குகின்றார்கள். ஆனல், நாவலரவர்கள் விதைத்த பயிர். பெருங் கதிர் ஈன்றுள்ளது. சைவப் பிரகாசவித்தியாசாலையைப் பாருங்கள். நல்ல காலம் சைவப் பெருமக்கள் நாவலரவர்கள் உருவச் சிலை தாபிக்கப் போகிறார்கள். இனியென்ன வேண்டும்? "இந்துசாதனம்'' ஒரு சைவ சமயப் பத்திரிகை. வாரந் தோறும் கூறிக்கொள்ளும் ஒரு ஞானபாநு. புதினத்தாள்போல இந்துசாதனத்தைக் கருதலாமா? சைவ சமயிகளில் எத்தனைபேர் இந்துசாதனத்தைச் சிந்தையில் நினைக்கிறார்கள்? ஆ! வெட்கம்! வெட்கம்!! சென்ற சில மாதங்களாகச் சமயத்துக் (பொக்கிஷ) களஞ்சிய அறை திறக்கப்பட்டு அநேக அநுபவசித்தச் செந்நெறிச் செல்வர்கள் பொருள் பொதுளிய கட்டுரைகளைத் தட்டுத்தடையின்றி அள்ளி வீசுகின்றார்கள். நவராத்திரியின் மகிமை, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளும் வேறுசில பேரறிஞர்களும் வெள்ளிடை மலைபோலச் சைவமாண்பு புலப்படத் தருதலை ஒருமுறை கல்லாருங் கண்போட்டால் அவர் குலமெலாம் வாழுய! இலங்கையில் மாத சஞ்சிகைகள் பலவரலாம்; இந்துசாதனம் போன்ற ஒரு பத்திரிகை இங்கே வேறில்லை. சைவ சமயிகளின் ஒவ்வொருவீட்டிற்கும் இந்துசாதன ஒளி வீசுமானல், அன்றுதான் சைவர் என்ற இறுமாப்பாக ஆடவர் மகிழவும் நங்கையர்செவ்வியும் பரக்கும். நங்கையர்தானே சமயச் செல்வப் பொருளுக்கு உரியவர்கள். தற்காலம் ஆசிரியைகளான ஒவ்வொருவரும் சமயஒழுக்காற்றில் தங்கள் மாணுக்கியரைப் படியச் செய்வது பெரும் புண்ணியமாகும. — —

கோட்டு விற்பனவு விளம்பரம்

இராமலிங்கம் கனகசபாபதி நல்லூர் யாழ்ப்பாணம், —வழக்காளி
இல. M B. 3791 எதிராக
1. முருகேசு அப்புத்துரையும் 2. பெண் இரத்தினமும்
நல்லூர், யாழ்ப்பாணம், —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 3791-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும துண்டுக காணியைய 1967-ம் ஆ கார்த்திகை (நவம்பர்) மீ 27-ந் உ திங்கட கிழமை முற்பகல் 10 மணி தொடக்க அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 1900 கொடுபட்ட ரூபாய் 800 குறைக்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவில்பற்று நல்லூரிறை "இராசசூரியபணிக்கன்வளவு" வரகுச் செய்கை நிலப்பரப்பு 1 (Lms. V C.) ஒன்றும வடக்கெல்லைக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் வீடும் பயிர்களும் எல்லை: கிழக்கு றேட்டு வடக்கு முருகேசு வல்லிபுரமும் பெண் சிவபாக்கியத்தினதும் ஆதனம் மேற்கு இராமலிங்கம் கனகசபாபதியும் மறுபேரினதும் ஆதனம் தெற்கு கிறிஸ்ணர் முருகேசுவும் மறுபேரினதும் ஆதனம் யாழ்ப்பாணம் D: 178/63-ன் கீழ் பதிவு பெற்றது.

க. சரவணமுத்து
கொம்மிஷனர் & விலை மதிப்பாளர்
(எம் 270, 13-10 67)

173, குருசோ வீதி,
சண்டிக்குளி, யாழ்ப்பாணம்
25—9—67

கோட்டு விற்பனவு விளம்பரம்

முத்தர் குமாரசாமி கைம்பெண் கனகம்மா
இல. M B. 4677 எதிராக — வழக்காளி
1. லொண்ஸ்ரன்ரைன் ஜோன்பிள்ளை கைம்பெண் றெபேக்கா
2. ஜோன்பிள்ளை மகன் அன்ரனீற்று — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 4677 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1967 ம் ஆ கார்த்திகைமீ 26 ௳ ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 14,100/- ம 6-3-1962 தொடக்கம் 1-11-1962 வரைக்கும் ரூபா 12,000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இதுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 374-66 சதம். இவற்றில் 3-8-64 ல் ரூபா 4000/- மும் 24-8-65 ல் ரூபா 2000/- மும் 9-5-66ல் ரூபா 3000/- மும் 14-8-67 ல் ரூபா 7036-31 -ம். கோட்டுச் செலவால் ரூபா 150/- கட்டப்பட்டது. தற்போது வருமதியான பணம் ரூபா 1801-34..

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சண்டிக்குளி கோயிற்பற்று கரையூர் இறை 'கொண்கடபாண்டித் தோட்டம்' நிலப் பரப்பு 3½ கல்வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு றேட்டு. வடக்கு சந்தியா பாவிலுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு பஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸினுடைய உரிமையாளரின் ஆதனம். தெற்கு அலுறும்பிள்ளை கைம்பெண் மரியாம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்.

நம் 35/2, கோழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்,
சண்டிக்குளி, யாழ்ப்பாணம். கொமிஷனரும்,விலைமதிப்பாளரும்.
M 268 13—10—67.

காந்தியடிகளின் வாழ்க்கைச் சிறப்பு

[திரு. செ, தருமராசா, பருத்தித்துறை]

தரணியில் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும அர்ப்பணித்த தியாகிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக விரல்விட்டு எண்ணத்தக்க வகையில் அவதரித்திருக்கிறார்கள். செயற்கரியன செய்து மாந்தரின் உள்ளத்தைக் கவர்ந்துகொண்டவர்கள் சிலரினும் சிலரே.

சொல்லியவற்றைச் செயலிலும் செய்துகாட்டி தமக்கும பிறர்க்கும் மணம்கொடுக்கும அழகிய மலர்போல் மணம் பரப்பி இருளை அகற்றும் ஒளிகாட்டியாக வாழ்ந்தவர்களைப் பாரதத் தாய் மக்கள்சேவைக்குத்தனபரிசாக அளித்திருக்கின்றாள்.

அறியாமை இருளையும் தீயசக்திகளையும் வெறறிகொள்ளும்பொழுது அவர்களுக்கு ஏற்பட்ட இடுக்கணும், சோதனையும் கொஞ்ச நஞ்சமல்ல

காந்தியடிகள் சிறந்த தேசபக்தரல்லாமல் பெரிய தெய்வ பக்தருமாவர். புலால், மது, காமம் என்னும் இம் மூன்று தீயபழக்கங்களையும் அவர் அறவே ஒழித்தார். அதற்காக அவர் பல அரிய சோதனைகளை — தடைகளைத் தாண்டவேண்டி இருந்தது. அவர்தம் தாய்க்களித்த சத்திய நெறியிலிருந்து சிறிதேனும் விலகினரல்லர்.

அதற்காக அவர் தம் நண்பர் பலரினது அவமதிப்பையும் பெற வேண்டியிருந்தது. ஈற்றில் அன்னையிடம் அளித்த சத்திய வாக்கைக் காப்பாற்றி வெற்றியுங் கண்டார். அன்பு, அஹிம்சை, சத்திய நெறி முதலானவற்றை தம் வாழ்க்கைக் குரிய சாதனங்களாக அமைத்துக்கொண்டார். மற்றவர்களும் அவ்வாறே வாழப் பழகவேண்டுமென அவர்களையும் வற்புறுத்தினர். ஏழை மக்களுக்குத் தொண்டுகள்செய்தார்.

காந்தியடிகள். "தந்தை தாய் பேண்'', தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' என்ற முதுமொழிகளுக்கிணங்க வாழ்ந்தவராவர். அவர் தன் தாயின் உள்ளத்தை ஒருபொழுதேனும் புண்படுத்தி வாழந்தவரல்லர். அவர் தம வாக்கைத் தெய்வ வாக்காகப் போற்றித் தன் வாழ்க்கையில் கொணடொழுகினர். அவைபற்றிய சம்பவங்களை அவர்தம் நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. தந்தைகளைப்புற்ற நேரத்தில் அவரருகில் அமர்ந்து அவர் செய்த தொண்டுகள் அளப்பரியன. ——

அகில உலகக் கால்நடைத் தினம்

அகில உலகக் கால்நடைத் தினம் பாணந்துறைப் பூங்காவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வழமைபோல் ஒருயானை உட்படப் பணிலங்குகளுக்கும் உணவளிக்கப்பட்டது.

பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த வணக்கத்துக்குரிய நாரததேரோ கூறியதாவது; "இந்த நகரிலே சென்ற இருபது வருடங்களாக இத்தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடவும் நான்கு போயாதினங்களிலும் இறைச்சிக்கடைகளை மூடவும் ஒழுங்குகள் செய்த டாக்டர் டபுள்யூ. எஸ். பெர்ணுந்தோ அவர்களுடைய பணியைப் பாராட்டுகின்றேன். நான்கு போயா தினங்களிலும் நாட்டிலுள்ள எல்லா இறைச்சிக் கடைகளும் மூடப்பட வேண்டுமென்ற பிரேரணையை நான் ஆதரிக்கிறேன். அத்துடன் நாட்டிலுள்ளபௌத்தமதத்தைச் சேர்ந்த மக்களெல்லாம் அந்த நான்கு தினங்களிலும் மாமிசம் உண்ணக்கூடாதென்ற பிரேரணையொன்றையும் நிறைவேற்றல் வேண்டும். பெரும்பான்மையானமக்கள் பௌத்தசமயத்தை அனுட்டிக்கும் நாட்டில் கோறிவைத்தலைப்பாடசாலைகளில் ஒரு பாடமாக்குவதையிட்டு நான் வெட்கப்படுகிறேன்."

டாக்டர் டபுள்யூ எஸ். பெர்ணுந்தோ அவர்கள் கூறியதாவது, "1915-ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17-ந் தேதி நாட்டில் அஹிம்சையைப பரப்பும் நோக்கத்துடன் உலகக்கல்லூரி (Universal ColLege)யை ஆரம்பித்தேன். உலகம் முழுவதிலும் அஹிம்சையைப் பரப்ப 42 நாடுகளில் கிளைச் சங்கங்களை நிறுவியுள்ளோம். நாட்டில் கால்நடைகளை வதை செய்வதை அரசாங்கம் தடைசெய்தற்குச் சட்டமியற்றுதல் வேண்டுமென்ற ஒரு பிரேரணையை ஜூன் மீ 1-ம் தேதி 1939-ல் காலஞ்சென்ற ஜோர்ஜ் ஈ. டி. சில்வா அவர்கள் தலைமையில் கூடிய ஒரு அஹிம்சைமகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

வணக்கத்துக்குரிய சுமண தேரோ அவர்கள் தாவர போஷணத்தை உட்கொள்ளுகின்ற மக்கள் இன்பமாக வாழலாமெனவும் மாமிச உணவை நீக்கியவர்கள் 120 வயதுக்கு மேல் வாழ்ந்த பல்நாட்டு மக்களின் வரலாறுகளுண்டெனவும் கூறினார்.

இலங்கைச் சீவகாருண்ணிய சங்கத் தலைவர் டாக்டர் டபுள்யூ எம். ஜயசூரியா அவர்கள் நாட்டில் கால்நடை வதையையும் கள்ளுச்சேர்த்தலையும் அரசாங்கம் ஆதரிக்கிறதையிட்டுக் கவலை கொள்வதாகக் கூறினார்,

அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு; க. செ த. செ, செல்லையாபிள்ளை அவர்களின் அடைவு கடையில் 1—4—65 முதல் 31—3—66 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் 8—11—67 புதன்கிழமை காலை 10 மணியிலிருந்து மீட்கப்பட்ட நகைகள் பிறநீங்கலாக மிகுதி நகைகள்ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்பனவு செய்யப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

C. Ragunathan
Auctioneer

7—1—67

எம், 262, 13, 6—10 13—10

யாழ்ப்பாணம்

— ஐக்கிய இலாபநிதி —

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை J. P.
சிறுப்பர்.

Std. 14.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

காலஞ்சென்ற காரைநகர் மேற்கு, கந்தையா சபாரெத்தினமும் பெண் கோமளவல்லியின் ஆதனங்களின் தத்துவம் — இறந்தவர்

தத்துவ வழக்கு இல: 736

காரைநகர் மேற்கு கந்தையா சபாரெத்தினம் — தத்துவகாரன்

எதிராக

1. காரைநகர் மேற்கு சுப்பிரமணியம் தம்பையா பராயமற்றவர் 2. ஷை யூர் பழனி வேலாயுதம் சபாரெத்தினம் — உத்தரவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 736-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நகைகள் 1967-ம் ஆ கார்த்திகை மீ 8-ந் உ புதன்கிழமை பத்து மணி தொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டுக் கந்தோரிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

நகைகளின் விபரம்

1. ஒரு தாலிக்கொடி,	11 பவுண் நிறை.
2. ஒரு சோடி தோடுகள்,	½ பவுண் நிறை.
3. ஒரு மூக்கு குச்சி,	1/16 பவுண் நிறை.

காரைநகர், 1967-ம் ௵
புரட்டாசி மீ 23-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.
அன்ட் ஏல விற்பனையாளர்

எம். 266, 13—10—]

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வண்ணார்பண்ணை கிழக்கு கனகசபை கைம்பெண் மீனாட்சிப்பிள்ளை —வழக்காளி.

இல. M B 4935 எதிராக

வண்ணார்பண்ணை வடமேற்கு காசிநாதர் கந்தையா —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B. 4935-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1967-ம் ஆ மார்கழி மாதம் 3-ந் திகதி (3-12-67) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 2758 சதம் 33. இன்னும் ரூபா 2000 த்துக்கு 13 7-62 தொடக்கம் 20-12-62 வரைக்கும் 100 க்கு 10 வீத வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 234 சதம் 62. இதில் ரூபா 125 குறைவு. செலவால் ரூபா 700 றும் தீர்வைத் தொகையால் ரூபா 180-00 குறைவு.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று கொககுவில் கிழக்கு இறை 'கொச்சிக்காடும் பிரப்பன்குளாய்' பா கில இலா. 2 குளி 12, 7/8 வீடும் கிணறும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு சின்னத்துரை பெண் துரையம்மாவினுதனம். வடக்கு காசிநாதர் கந்தையாவினுதனம். மேற்கு முருகேசு முத்துவேலுவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு கதிர்காமு வயித்திலிங்கமும் கையொழுங்கையும். ஆனால் கிணற்றிற் பங்கும், வளிவாய்க்காலும் வடக்குக் காணிக்கு புறநீங்கல். முற்பதிவு D. 258/297.

நா. செல்லையா
Commissioner, Auctioneer & Valuer

37, கொழும்புத்துறைவீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
சுண்டிக்குளி. யாழ்ப்பாணம், 9-10-67 M 265 13-10-67.

வேங்கடேசர் உற்சவம்

—0—

யாழ்-வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் வருடாந்த அலங்கார உற்சவம் செல்வ 3-10-67 ல ஆரம்பமாயது. 11-10-67 - ல் இரதோற்சவமும், 12-10-67-ல் தீர்த்தோற்சவமும் மிகவும் சிறப்பாக நிகழ்ந்தன. தேர், தீர்த்த விழாக்களில் பெருந் தொகையான அடியார்கள் பக்திசிரத்தையுடன் கலந்துகொண்டார்கள்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊரெழு தெற்கு, சுன்னாகம்,
1. செல்லையா திருநாவுக்கரசு
2. திருநாவுக்கரசு பெண் சரஸ்வதி — வழக்காளிகள்.

வழ. இல: M B. 7158

எதிராக

நீர்வேலி தெற்கு, நீர்வேலி
1. இராமு வல்லிபுரம்
2. முருகேசு கந்தையா
3. கந்தையா பெண் வள்ளிப்பிள்ளை — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 7158 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1967 -ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31-ந் திகதி (31-10-67) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிகட்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

தீர்வைத்தொகை: ரூபா 7500ம் 31-12-64 தொடக்கம் 14-3-66 வரைக்கும் ரூபா 5000 -க்கு 9 வீத வட்டியும், அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றாக இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 471-10 சதமும். இவற்றில் ரூபா 3000-00 கழிக்கப்படவேண்டும்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று நீர்வேலிஇறை "அம்புலிபாப்புலம் நிலப்பரப்பு 4 வீடும் பயிர்களும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும். வழிவாய்க்காலும். எல்லைகிழக்கு இராமு கந்தையாவின் ஆதனம். வடக்கு பண்டாரம் கதிர்காமருக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு ரோட்டு. தெற்கு சச்சிதானந்தன் பெண் நவநீதத்தின் ஆதனம். K 183/86 -ல் பதியப்பட்டது, இதடங்கலும்.

2. ஷை நீர்வேலிஇறை 'வேலாயவத்தை' நிலப்பரப்பு 2 குளி 3 தெற்கெல்லைக் காணியின் தெற்கெல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் கிழக்கெல்லைக் காணியின் கிழக்குப் பக்கமாக தெற்கெல்லையோரமாக ரோட்டிலிருந்து போகும் பாதையில் உரிமையும். எல்லை கிழக்கு அம்பலவர் இளையதம்பியின் ஆதனம் வடக்கு தம்பையா பெண் யாழுவதிப்பிள்ளையின் ஆதனம். மேற்கு சதாசிவம் செல்லத்துரைக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு கதிர்காமர் பண்டாரத்தின் ஆதனம். K 109/179 ல் பதியப்பட்டது. இதடங்கலும்.

3. ஷை நீர்வேலிஇறை "பாத்தைப் புலம் நிலப்பரப்பு 9 தென்மேற்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கு முடிக்குரிய காணி. வடக்கு சதாசிவம் செல்லத்துரைக்கும் மற்றையோருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு அம்பலவாணர் இராமுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் தெற்கு வேலுப்பிள்ளை பொன்னையாவின் ஆதனம் இதில் சொரியலாக 1/3 பங்கு K, 141/257 ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
Commissioner & Valuer.
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்

மல்லாகம், 24-9-67

எம், 269, 13-10—)

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு வலந்தலை சயம்புவீதி அருணசலம் தம்பையா அவர்களிடம் 1965 ம் வருஷம் ஏப்ரல் மீ 1-ம் (1-4-65) திகதிக்கு முன் அடைவ வைத்து மீட்கப்படாத அடைவுகளை 1967-ம் ௵ நவம்பர் மீ 8-ந் திகதி (8-11-67) புதன்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ, குட்டிப்பிள்ளை,
Commissioner, Valuer & Licensed Auctioneer.

"இராசகிரி" ஏல விற்பனவாளர்,
643, காங்கேசன்துறைவீதி, கொமிஷனரும். விலைமதிப்பாளரும்,
யாழ்ப்பாணம். 9-10-67. M, 263 13, 20-10-67.

கோட்டு விற்பனவு விளம்பரம்

1. நாகலிங்கம் மார்க்கண்டுவும் பெண் 2. சிவபாக்கியமும் 82/1, கச்சேரி நல்லூர் ரோட்டு யாழ்ப்பாணம் —வழக்காளி

இல, எம். பி. 7964 எதிராக

1. நன்னியர் சின்னையாவும் பெண் 2. தங்கேஸ்வரியும் நெடுங்குளம் ரோட்டு அரியாலை மேற்கு யாழ்ப்பாணம், 3. முனசிங்கி ஆராச்சிகே பிரேமதாசாவும் பெண் 4. யோசேபினும், அரியாலை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 7964-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1967-ம் ஆ கார்த்திகை மீ 29-ந் உ புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபாய் 1410/-ம் 31-1-66 தொடக்கம் 7-7-66 வரைக்கும் ரூபாய் 1000-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாம் 251/75.

ஆதன விபரம்

வடமாகாணம் யாப்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை "பிராயந் தாழ்வு கிழக்கு அடைப்பும், பிராயந்தாழ்வு வளவும்" கில. பர. 3 குளி 6 பதிவு இலக்கம் D. 256/174 இதில் தெற்குப் பக்கமாக பிரிக்கப்பட்டிருக்கும் கில. பர. 1 குளி 6 இந்த கில. பர. 1 குளி 6-க்கும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சதாசிவத்தினுதனம், வடக்கு முனசிங்கி ஆராச்சிகே பிரேமதாசாவுக்கும் பெண் மேரி யோசேபினுக்கும் உரிய இதன் மிகுதி ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு பரமு மூத்ததம்பிக்கும் பெண் அன்னம்மாவுக்குமுரிய காணி, பதிவு இலக்கம் D. 295/84.

14, டேவிட் வீதி அ. போ எதிர்மனசிங்கி
யாழ்ப்பாணம் கொமிசனரும் விலைமதிப்பாளரும்
2—10—67 எம் 264, 13—10—)

கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்

சாவகச்சேரி தற்காலம் கண்டி, 1. நாகலிங்கம் இராமச்சந்திரனும் பெண் 2. சுகிர்தராணியும் வழக்காளிகள்

இல. 3188 எதிராக

சாவகச்சேரி தெற்கு 1. சுப்பிரமணியம் துரையப்பா சோமசுந்தரம் 2. கதிரவேலு ஆறுமுகம் பெண் 3. மகேஸ்வரியும் —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டு 3188 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, கீழ்க்காணுமாதனவிடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் 1967-ம் ஆண்டு கார்த்திகை மீ 20-ந் திகதி 20-11-67 திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:—ரூபா 5840-61 சதமும் 25-2-66 தொடக்கம் 10-7-66 வரைக்கும் ரூபா 3500/- க்கு 12 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறக்கும்வரையும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 337-40 சதமும் திருப்பி அனுப்பிய கொமிசன் செலவு ரூபா 12-ம், கொமிசனருக்குக் கொடுத்த செலவு ரூபா 203-10.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவில்பற்று சாவகச்சேரி இறை நீலகொத்திவளவு அல்லது தோப்பு வளவு கில பர 4, 1/2 காலரைக்கு எல்லை கிழக்கு நடராசா பெண் சின்னம்மாவுக்குரியவாதனம் வடக்கு செல்லத்தம்பி சுப்பிரமணியத்திற்குரியவாதனம் மேற்கு சின்னையா வடிவேலு பெண் சரஸ்வதிக்குரியவாதனம் தெற்கு ரோட்டு, இவ்வெல்லைக்குட் சேர்ந்த கிலம் பயிர்கள் கிணறு அடங்கலும் யாழ்ப்பாணம் காணிப் பதிவுகந்தோரில் F. 328-234-ல் பதியப்பட்ட காணி.

சாவகச்சேரி
17—10—67

மு நா. மார்க்கண்டு
கொமிசனர்.

எம் 261 13—10—

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக் கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 13—10—1967 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.